# கிருபையினாலே இரட்சிக்கப்படுதல் என்பதன் அர்த்தம் என்ன?

தேவனுடைய இராஜ்யத்தைப் பரப்புவதற்குச் சுயநலமற்ற வகையில் தமது வாழ்வை ஒப்புக் கொடுத்த காலம் சென்ற ஐரானார்த் அவர்களால், “ஆச்சரியமான கிருபை” என்ற கீர்த்தனையானது விரும்பப்பட்டது. அவர் தொடங்கி வைத்த “ஆச்சரியமான கிருபை” வேதாகம வகுப்பில் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஐராவை ஒருக்காலும் நேரடியாகச் சந்தித் திராவிட்டாலும், அவர் மேன்மையான ஒரு தேசத்தில் மகிழ்ச்சியுடன் (அவர்களைச்) சந்திப்பார்.

மூன்று நூற்றாண்டுகளாக, ‘‘ஆச்சரியமான கிருபை’’யானது ஆயிரமாயிரக்கணக்கான இருதயங்களைத் தொட்டிருக்கின்றது. அந்த வார்த்தைகளைப் “புரிந்து கொள்ளுதலுடன்” பாடுகின்ற ஒவ்வொருவரும் பிதாவின் இருதயத்தினுடைய மாபெருந் தன்மையைப் பார்த்துப் புத்துணர்வுடன் வியப்படைகின்றனர். அந்தப் பாடல் முடிவடையும் பொழுது, ஆராதிப்பவர் ஒவ்வொருவரும் தவிர்க்க முடியாத வகையில் தாழ்மையாகி, நன்றியுணர்வு மிகுந்து, பதில்செயல் செய்பவராகி, மற்றும் இன்னும் அதிகமாய் ஒப்புக் கொடுத்தல் உள்ளவராகின்றார்.

இந்தப் பாடலை எழுதியவரான ஜாண் நியூட்டன் தனது ஏழு வயதில் தாயற்றவராக இலண்டனில் விடப்பட்டார், தனது பதினோரு வயதில் அவர் ஒரு மாலுமியானார். விரைவிலேயே அவர் ஆபாசமிக்கவராக, தேவதூஷணம் செய்பவராக, மற்றும் தேவ பக்தியற்றவராக ஆனார். ஆப்பிரிக்காவில் இருந்து இங்கிலாந்துக்குச் சென்ற கப்பல் பயணம் ஒன்றில், வலிமை வாய்ந்த ஒரு புயலானது எல்லா மாலுமிகளையும் சக்தியற்றவர் களாக்கி உயிர் பிழைக்கும் நம்பிக்கையை இழக்கச் செய்தது. கப்பல் தரை தட்டி நிறுத்தப்பட்ட போது அவர் தனது அழிவைச் சந்திக்கும் நிலையில், பாவம் நிறைந்த தன்னுடைய வாழ்வை நினைத்துப் பார்த்தார். கப்பலானது சரி செய்யப்பட்ட பொழுது, அவர் ஜெபிக்கத் தொடங்கினார். அவர் மாற்றம் கொண்ட ஒரு மனிதரானார்.

இங்கிலாந்து திரும்பிய வேளையில், நியூட்டன் வேதாகமத்தைப் படிக்கத் தொடங்கினார். பிறகு, கப்பல் தலைவர் என்ற வகையில், அடிமைக் கப்பல் ஒன்றில் கருப்பு மனிதர்களை (அடிமைகளை) ஆப்பிரிக்காவில் இருந்து தெற்கு கரோலினாவின் சார்லஸ்டோன் வரைக்கும் கொண்டு

செல்லும் பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு மனிதத் தன்மையின்மையினால் அவரது இயல்பானது மாறுபட்டது. இராஜினாமா செய்த அவர் ஒரு கண்டனக் கடிதத்தை எழுதினார். மீண்டும் ஒருமுறை இங்கிலாந்தில் லிவர்பூல் என்ற இடத்தில் ஒரு அலுவலகத்தில் எழுத்தாளராக அவர் வேலையில் சேர்ந்தார். தமது முப்பத்தி ஒன்பதாம் வயதில் அவர் பிரசங்கிக்கத் தொடங்கி, நாற்பத்து மூன்று ஆண்டுகளாகப் பிரசங்கித்தார். அவரது எழுத்துக்களின் மத்தியில் இந்த அழகியப் பாடலின் வார்த்தைகளும் இருந்தன:

மா வல்ல கிருபை ஆ; சுகம்!
மா பாவி என்னையும்
இரட்சித்து மீட்டு காத்ததே
பார்வை அளித்ததே.

மா வல்ல கிருபை ஆனதே
என் பயம் போக்கவே
நான் நம்பி சேர்ந்த வேளையில்
அக்கிருபை கண்டேனே.

மா வல்ல கிருபை, அதுதான்
என் வழிகாட்டியே
இந்நேரம் மட்டும் காத்ததால்
மேல்வீடு சேர்க்குமே.

மா வல்ல கிருபை, ஜோதியே
ஆண்டாண்டும் நடத்தும்
பேரின்ப நாட்டில் வாழ்கையில்
என்றென்றும் துதியே.[1]

அவர் சுமார் எண்பத்து இரண்டு வயதுடையவரான பொழுது பிரசங்கிக்கத் தொடருதல் பற்றி அவரிடத்தில் எச்சரிக்கை விடுக்கப் பட்டதற்கு அவர், "தேவ தூஷணம் கூறிய வயது முதிர்ந்த ஆப்பிரிக்கன், தான் பேச முடியும் பொழுது நிறுத்துவானா?" என்று பதில் அளித்தார். அவர் தான் பிரசங்கம் செய்த இலண்டன் சபைக் கட்டிடத்தின் மீது வைப்பதற்காகக் கற்பலகையில் பொறித்து வைத்த கல்லறை வாசகம் பின்வருமாறு:

> ஜாண் நியூட்டன், எழுத்தாளர். ஒரு காலத்தில் சமய நம்பிக்கையற்று, சுயாதீனமாய்த் திரிந்து கொண்டிருந்தவர், ஆப்பிரிக்காவின் அடிமைகளுக்கு ஊழியராயிருந்தவர், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினுடைய ஐசுவரியத்தினால் காக்கப்பட்டு, மீட்கப்பட்டு, மன்னிக்கப்பட்டு மற்றும் தாம் முன்பு அழிக்கத் தேடிய விசுவாசத்தையே பிரசங்கிக்கும்படி நியமிக்கப்பட்டவர்.

## கிருபையின் எடுத்துக்காட்டுகள்

*Agape* என்ற புதிய ஏற்பாட்டின் மாபெரும் வார்த்தையானது, *charis* - கிருபை, தகுதியற்றவர்க்குத் தரப்படும் ஈவு என்பது இல்லையேல் தவறாகப் பெயர் உச்சரிக்கப்படுவதாகி விடும். தேவனுடைய படைப்பின் ("வானத்தையும் பூமியையும்"; ஆதி. 1:1) எல்லையற்ற அழகு மற்றும் மாபெரும் அளவு ஆகியவற்றில் நான் அகம் மகிழ்கின்றேன், ஆனால் அதை ஏற்படுத்தியே ஆக வேண்டும் என்ற வகையில் தேவன் எவ்விதத்திலும் எனக்குக் கடன்பட்டவராயிருக்கவில்லை. இது அவருடைய கிருபை யினாலேயே உள்ளது என்று நான் ஒப்புக் கொள்ள வேண்டும். நான் உயிருள்ளவனாயிருப்பதில் - ஆம், தேவனுடைய உலகத்தின் உயிர்களில் பிரதான உயிராய் இருப்பதில் - நான் அகம் மகிழ்கின்றேன், ஆனால் வாழ்வின் கொடையினை வழங்க அவர் என்னிடம் கடன்பட்டிருக்க வில்லை. எனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நான் பெற்றுக் கொள்ளாதது எது? (1 கொரி. 4:7ஐக் காணவும்). "ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபை யினாலேயே இருக்கிறேன்" (1 கொரி. 15:10) என்பதை நான் மீண்டும் ஒப்புக்கொள்ளவேண்டும்.

மாபெரும் பழைய ஏற்பாட்டு வார்த்தையான *hesedh* என்பது அதனுள் கிருபை என்பது அடங்கியிராதிருந்தால் வெறும் கூடாகவே இருக்கும். *Hesedh* என்பது அடைப்படையில் "வளைக்க, சாய்க்க" என்றுள்ளது. பாவம் நிறைந்த, பிணங்குகின்ற, கோபமான காயீனைப் பார்ப்பதற்காகப் பூமிக்கு வருவதற்கு நேரம் எடுத்துக் கொண்டார் என்ற வகையில் பிதாவைக் காண்கையில் ஒருவர் கிருபையும், அக்கறையும், வளைந்து கொடுக்கும் இயற்பண்பும் உள்ள பிதாவை காண்கின்றார். இடைவிடாது கிரியை செய்கிற அண்டத்தின் தேவனானவர் கீழ்ப்படியாத காயீனைக் கண்டுகொள்ளாது விட்டிருந்தால் அது சரியென்றே எண்ணப்பட்டிருக்கும். இருப்பினும் கிருபையானது அப்படிப்பட்ட விஷயங்களுக்கு அப்பால் செல்லுகின்றது. அந்தக் கிருபையே பரலோகத்தின் மாண்பை விட்டுவிட்டு ஒரு நபரிடம் தனிநபர் ஊழியம் செய்யும்படி, வருவதற்குப் பிதாவை அசைத்தது. "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்" (சங். 103:13, 14).

தேவனுடைய இயற்பண்பானது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் ஒன்று போலவே இருப்பதால் ("நான் கர்த்தர், நான் மாறாதவர்"; மல். 3:6), லூக்கா 15ன் ஊதாரி மகன் உவமையில் அவரைப் பற்றிய புதிய ஏற்பாட்டின் சித்தரிப்பினால் ஒருவர் வியப்படைவதில்லை. அவர், பரிவிரக்கத்துடன், ஓடி, வளைந்து, அழுக்கான, அழகற்ற, காலணியற்ற, பாவம் நிறைந்த மகனின் கழுத்தின் மேல் சாய்ந்து அவனைக் கட்டிப் பிடித்து முத்தம் செய்யும் தகப்பனைப் போன்றவராகக் காண்பிக்கப்படுகின்றார் (வசனம் 20ல் வரும் கிரேக்க வார்த்தையானது "அதிகமாய்" என்று அர்த்தப் படுகின்றது). கண்டிப்பான நீதி என்பது ஒருக்காலும் வளைவதில்லை,

ஆனால் கிருபையானது வளைகின்றது.

இயேசு, கிருபையின் மாம்சப் பிரகாரமான நபர்த்துவப் படுத்துதலாய் இருக்கின்றார். அவர் "எருசலேம் போகத் தீர்மானித்திருந்தார்"; அவர் சிலுவையைச் சகித்தார், வெட்கத்தைப் புறம்தள்ளி, தம்மைக் கொலை செய்பவர்களுக்காக ஜெபித்தார், "பிதாவே இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக். 9:51; 23:34; எபி. 12:2). ஒவ்வொரு நபரும் (யோவா. 19:25-27ல் நான்கு மனிதர்கள் செய்தது போல) சிலுவையின் புயங்களின் கீழ் இருளில் சில நேரத்தைச் செலவழிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சம்பவத்திற்குப் பிறகு, கல்வாரியில் தேவன் எல்லா மக்களுக்கும் ஒரு உடன்படிக்கையை வலிந்து ஏற்படுத்தினார் என்றோ, அல்லது இரத்தத்தால் முத்திரையிடப்பட்ட உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளும் பாவிகள் தேவனுடனான "அண்டியிருத்தல் ஒப்பந்தத்தில்" பிரவேசிக்கின்றனர் என்றோ ஒருவர் ஒருக்காலும் கூறமாட்டார். அதற்குப் பதிலாக, சகல கிருபையின் தேவன், இருளான மற்றும் இறைஞ்சிக் கேட்கும் பாவிகள் தம்முடைய பிள்ளை களாவதை அரையிருட்டில் உற்று நோக்குவார் என்று அவர் கூறுவார். "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினால் பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினால் நம்மையும் அறியவில்லை" (1 யோவா. 3:1).

சிலுவையைப் பற்றிக் கேள்விப்படுகின்றவர்கள் இயேசுவை ஒரு மூத்த சகோதரராக, பாவிகளை "சகோதரர் என்று சொல்ல வெட்கப்படாமல்" (எபி. 2:11) அவர்களைத் தம்முடைய இரத்தத்தினாலே கழுவும்படி கெஞ்சியவராகக் காணவேண்டும்.

## கிருபை தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது

### கிரியைகளினால் இரட்சிப்பு?

மனிதரின் கிரியைகள் (செயல்கள்) இரட்சிப்பைக் கொண்டு வருகின்றன என்ற சிந்தனையினால் கிருபையின் நறுமணம் வீசும் இதழ்களைக் கசக்குகின்றவர்கள் கிரியைகளின் பலனைக் கிருபையுடன் ஒட்ட வைக்கின்றனர். ரோமன் கத்தோலிக்கர்கள் அலுவலக ரீதியான "நற்செயல்களின் கருவூலம்" ஒன்றைக் கொண்டுள்ளனர், அங்கு தீயசெயல் களை வெற்றிகொள்ள/மூடி மறைக்க நல்ல செயல்கள் சேமிக்கப் படுகின்றன, இது ஒருவர் "உத்தரிக்கும் இடத்தில்" இருக்கும் நாட்களை குறைக்கும் முயற்சியாக உள்ளதாகக் கருதப்படுகின்றது. புனித யாத்திரை களும் திருவருட் சாதனங்களும் விசுவாசமுள்ள கத்தோலிக்கர்களுக்கு "கிருபையை அளிக்கின்றது" என்று கூறப்படுகின்றது. இதற்கு முரண்பட்ட வகையில், புதிய ஏற்பாடானது தகுதியுடைய நற்செயல்கள் எதனையும் கிருபையினால் உண்டாகும் இரட்சிப்புடன் தொடர்பு படுத்துவதைத் தடை செய்கின்றது. "அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது; அப்படியல்லவென்றால் கிருபையானது

கிருபையல்லவே" (ரோமர் 11:6).

ஒரு கருத்திலிருந்து நோக்கினால், ஒருவர் தமது சொந்த இரட்சிப்பு நிறைவேறப் "பிரயாசப்பட" வேண்டும் (பிலி. 2:12); ஆனால் இன்னொரு கருத்திலிருந்து நோக்கும் பொழுது, ஒருவர் பரலோகத்திற்குச் செல்லத் தமது வழியைத் தாமே தயார்ப்படுத்துவதென்பது இயலாததாக உள்ளது. "அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு, நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்ய வேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள்'' (லூக். 17:10).

## கிருபை மட்டுமா?

தேவனுடைய கிருபையானது இரட்சிக்கும் வல்லமையில் தனிச் சிறந்ததாக இருக்கையில், தெய்வீக கிருபையை ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கு கிரியைகள் (செயல்கள்) இன்னமும் அவசியமானவைகளாய் உள்ளன. கிருபையினால் மட்டுமே இரட்சிப்பு என்று வேதாகமம் போதித்தால், எவரொருவரும் இழந்து போகப்பட முடியாது, ஏனெனில், "தேவனுடைய கிருபையினாலே'' ஒவ்வொரு மனிதருக்காகவும் இயேசு மரித்தார் (எபி. 2:9). மனித பதில்செயல்கள் அவரது கிருபையுடன் செயலாற்ற வேண்டும். தேவனுடைய கிருபையானது ஆகாருக்கு ஒரு கிணற்றைத் திறந்தது, ஆனால் அவள் சிலவற்றைச் செய்ய வேண்டியிருந்தது, இல்லையென்றால் தாகத்தினால் அவள் மரித்துப் போயிருப்பாள்: அவள், "போய், துருத்தியிலே தண்ணீர் நிரப்பி ..." (ஆதி. 21:19).

செங்கடலைத் திறத்தல் என்ற தேவனுடைய கிருபையின் செயல்பாடு மட்டுமே இஸ்ரவேலர்களை விடுவித்திருக்க மாட்டாது. அவர்கள் சற்று நடக்க வேண்டியிருந்தது, ஆனாலும் அவர்களில் எவரொருவரும் பார்வோனிடமிருந்து விடுதலையைத் தனது சொந்தக் கிரியையினால் பெற்றுக் கொண்டிருந்ததாகக் கருதவில்லை. அவர்கள், "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாத படிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல'' (எபே. 2:8, 9) என்று பாடியிருக்க முடியும்.

எனவே, இன்றைய நாட்களில் பாவி ஒருவர் ஞானஸ்நான நீரிலிருந்து மேலே வருகிறபோது இப்படி இருக்கிறது: அவர் தம் கிரியைகளை நிறைவேற்றி இரட்சிப்பை ஈட்டியதாகத் தம்மையே பாராட்டிக் கொள்வதில்லை. அவர் தாம் செய்த எந்தக் கிரியையினாலும் அல்ல, ஆனால் கிருபையினாலேயே நீதிமானாக்கப்பட்டுள்ளதாக அறிகின்றார் (தீத்து 3:5-7). கீழ்ப்படிதல் இல்லாதவரை கிருபையானது ஒருக்காலும் நீதிமானாக்குவதில்லை (யோவா. 3:36; எபி. 5:9).

## ஞானஸ்நானத்திற்குப் பிந்திய கிருபை?

புதிய ஏற்பாட்டில் உள்ள வேறு எதுவும் ஞானஸ்நானத்திற்குப் பிறகு

*கிறிஸ்தவருக்குக் கட்டுப்பாடுடையதல்ல என்று கூறுமளவுக்குச் சில பிரசங்கியார்கள் கிருபையைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். நடபடிகள் புத்தகத்திற்குப் பிறகு உள்ள ஒவ்வொன்றும் ''அன்புக் கடிதங்களின் கொத்தாகவே உள்ளது; கிருபை ஒவ்வொன்றையும் பராமரித்துக் கொள்ளு கின்றது'' என்று அவர்கள் உறுதிப்படக் கூறுகின்றனர். அவர்கள் "நியாயப் பிரமாணம்'' என்கிற வார்த்தையைக் குறித்துச் சீற்றம் அடைகின்றனர், ஒவ்வொரு யுகத்திலும் உள்ள நியாயப்பிரமாணமானது (ஆதி. 18:19; சங். 119:97; ரோமர் 8:2) பரிசுத்தமும் நீதியும் நன்மையுமானதென்று (ரோமர் 7:12) அவர்கள் உணருவதில்லை. நியாயப்பிரமாணத்தின் மூலமாகவே கிருபை செயல்படுகிறது என்பதை அவர்கள் உணரத் தவறுகின்றனர் (தீத்து 2:11-15).*

*ரோமர் 6:14 மற்றும் கலா. 5:18ல் சார்படை அற்றுப் பயன்படுத்தப்படும் ''நியாயப்பிரமாணம்''[2] என்பதை அவர்கள் தவறாகப் பயன்படுத்தும் செயலானது, கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் இருக்கின்ற னர் என்று போதிக்கும் புதிய ஏற்பாட்டு வசனங்கள் பலவற்றிற்கு (ஏசா. 2:1-4; எரே. 31:31-34; ரோமர் 3:27; 8:2; 1 கொரி. 9:21; கலா. 6:2; யாக். 2:12) அவர்கள் முரண்படும்படியாக வழி நடத்தியுள்ளது. இந்தப் பிரசங்கியார்கள் பழைய ஏற்பாட்டை, "எழுதப்பட்ட ஒரு சட்டமுறைமை'' மட்டுமே என்று கண்டனம் செய்வதுடன், கிறிஸ்தவர்கள் அதிலிருந்து விடுதலையாக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டவும் செய்கின்றன. "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருப்பதால்'' (ரோமர் 13:10; கலா. 5:14ஐக் காணவும்), கிறிஸ்தவர்களுக்கு அன்பைத் தவிர எந்த நியாயப் பிரமாணமும் இல்லை, இது (அன்பு) "எழுதப்பட்ட சட்டமுறைமை''யில் காணப்படுவதில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். இந்த மனிதர்கள் இவர்களின் (இந்தக்) கோட்பாட்டுடன், ஞானஸ்நானத்தையோ அல்லது கர்த்தருடைய பந்தியையோ சீர்த்தன்மையுடன் போதிக்க முடியாது, ஏனெனில் அப்படிப்பட்ட பாடக் கருத்துக்களில் "அன்பு'' என்ற வார்த்தை யானது அடங்குவதில்லை.*

*இந்தப் பிரசங்கியார்கள் தர்க்கரீதியாகத் தங்களை அன்பு - ஒழுக்க வியலாளர்கள் என்று வகைப்படுத்திக் கொண்டுள்ளனர், இவர்கள் அன்பு தூண்டுமென்றால் எந்த செயல்பாடும் தவறாயிருக்க முடியாது. கருக் கலைப்பும் கருணைக் கொலையும் கூட தவறாயிருக்க முடியாது - என்று கூறுகின்றனர். எந்த ஒரு செயலும் தன்னிலே தவறுள்ளதாகக் கருதப் படுவதில்லை: ஜூலியன் ஹக்ஸ்லீ என்பவர், ''முற்றானவைகள் என்று எதுவும் இல்லை'' என்று கூறினார். முனைவர் ஹார்வி காக்ஸ் என்பவரின் கூற்றுப்படி, சூழ்நிலைகள் மாறுபடுவதற்கேற்ப ஒழுக்க ரீதியான முடிவுகளும் மாறுகின்றன, ''நல்லதென்று உணருகின்ற எதையும் செய்யுங்கள்.'' இந்தச் சிந்தனையானது ஆபாச இலக்கியம் அல்லது ஓரினச் சேர்க்கை ஆகியவற்றைக் கண்டனம் செய்ய மறுக்கின்றது; இது "விபசாரம்,'' "வேசித்தனம்'' மற்றும் "பாவம்'' என்ற வார்த்தைகளை ஒப்புக் கொள்ளு வதில்லை. மியாமியில் உள்ள உளவியல் அறிஞரான கிரான்வில் ஃபிஷர் என்பவர், "பாலுணர்வு என்பது ஒழுக்க ரீதியான கேள்வி அல்ல'' என்று*

கூறினார். இதற்கு மாறாக, "அது சமூகத்திற்கு உகந்ததாயுள்ளதா, தனிப் பட்ட வகையில் ஆரோக்கியமுள்ளதாகவும் பலனளிப்பதாகவும் உள்ளதா, மனித வாழ்வை வளப்படுத்துமா?" என்பவை அடிப்படைத் தத்துவமாக இருக்கவேண்டும் என்று அவர் கூறினார். இவ்விதமாக அன்பு மற்றும் கிருபையின் பரிசுத்த உபதேசங்கள், சிற்றின்பம் மற்றும் ஒவ்வொரு முற்றான ஒழுக்கவீனத்தையும் மூடி மறைக்கத் தவறாகப் பயன்படுத்தப் படுகின்றன.

உண்மையில், கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட கோட்பாடு ஒன்றுள்ளது: அது புதிய ஏற்பாடு ஆகும். தேவனை அறிந்திருப்பதாக உரிமைகோரியும், அவரது கட்டளைகளைக் கடைப்பிடிக்காதவன் "பொய்யனாய்" இருக்கின்றான் (1 யோவா. 2:4) - மற்றும் அவருடைய கட்டளைகள் வேறு எவ்விடத்திலும் அல்ல ஆனால் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டில் உள்ளன (மத். 10:40; லூக். 10:16; யோவா. 16:13 ஆகியவற்றைக் காணவும்). சரியாகச் சிந்திக்கும் நபர் தம் உள்ளத்தில் நாட்டப்பட்ட வசனத்தைத் தம்முடைய ஒழுக்க வழிகாட்டியாக தாழ்மையோடு ஏற்றுக் கொள்கின்றார் (யாக். 1:21), மற்றும் அது கொண்டு செல்லும் போக்கிலேயே அவர் செல்கின்றார்.

அகஸ்டீனின் பின்வரும் வார்த்தைகள் சரியாகப் புரிந்து கொள்ளப் படுகையில் உண்மையும் அழகும் உள்ளவைகளாயிருக்கின்றன: "அன்பு கூருங்கள் மற்றும் உங்களால் ஆனதைச் செய்யுங்கள்.'' அன்பு ஒழுக்க வியலாளர்கள் மற்றும் எழுதப்பட்டதொரு பிரமாணமில்லாத பிரசங்கியார்கள், எழுதப்பட்ட கட்டளைகளின்றி ஒரு அன்பு - ஒழுக்கவியல் கோட்பாடு என்பதைப் பற்றிக் கொண்டிருந்தால் அவரது கூற்றைப் புரிந்து கொள்வது இல்லை. அடிப்படையானது மற்றும் ஒன்றேயானது என்று அகஸ்டீன் மேன்மைப் படுத்திய அன்பானது தேவனுக்கான அன்பில் தொடங்கி வேதாகமத்திற்கான மதிப்பில் முடிகின்றது. அவரது சிந்தனையின்படி, ஒருவர் தேவன் மீது தாம் அன்புகூர வேண்டிய வகையில் அன்புகூர்ந்தால், அவர் தேவனுடைய கட்டளைகள் யாவற்றின் மீதும் பயபக்தியாய் இருப்பார். மிகமேன்மையான இந்த அன்பின் மீது ஒருவர் கவனம் செலுத்தினால், பின்பு அவர், தேவன் அங்கீகரித்துள்ள எதையும் செய்யவும், தேவன் கண்டனம் செய்துள்ள எதையும் மறுக்கவும் ''சித்தம்'' கொள்கின்றார். தேவனுடைய சித்தமே கிறிஸ்தவரின் சித்தமாகின்றது. தேவன் மீது ஒருவர் உண்மையாகவே அன்புகூர்ந்தால், அவரது சித்தமானது தேவனுக்கு முழுமையாகக் கீழ்ப்படிதலாக உள்ளது. "பழைய மனுஷன்" மரித்திருப்பதால் (ரோமர் 6:6; எபே. 4:22), கிறிஸ்துவே அவருக்கு "எல்லாம்" (கொலோ. 3:11) ஆகின்றார், மற்றும் அவரது, "ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" (கொலோ. 3:3). தேவன் தம்மை மூடி மறைக்கும்படி அவர் விருப்பத்துடன் அனுமதித்துள்ளார். ''உம்மில் இளைப்பாறுதல் கண்டடையும்வரை எங்களது ஆத்துமாக்கள் அலைப் புண்டு இருக்கின்றன.'' அந்தப் புரிந்து கொள்ளுதலில், ஒருவர் அன்பு கூர்ந்தால் அவர் தமக்குச் சித்தமானதைச் செய்யச் சுயாதீனமாயிருக்கிறார் என்பது அழகு நிறைந்த வகையில் உண்மையாய் உள்ளது.

## *பாவங்களை அறிக்கையிடுதல் இல்லையா?*

*ஒரு கிறிஸ்தவர் தனது பாவங்களை அறிக்கையிடக் கூடாத அளவுக்கு தேவனுடைய இலவசமான கிருபையானது அவ்வளவு ஆழமானதாகவும் அகலமானதாகவும் உள்ளது; மற்றும் அவர் அவ்வாறு செய்வாரானால், அவர் தாம் தேவனுடைய கிருபையைப் போதுமான அளவு நம்புவதில்லை என்று காண்பிக்கின்றார் என்று சிலர் கூறுகின்றனர்; ஒரு பிரசங்கியார் பின்வருமாறு எழுதினார்:*

> *ஒன்று யோவான் 1:9 வசனமானது இயேசுவின் இரத்தத்தினால் ஒருவர் பெறக் கூடிய பாவமன்னிப்பிற்கான சட்டப் பூர்வமான அறிக்கையின் செயல்முறைப் பற்றிப் போதிப்பதில்லை. ... நாம் பாவிகளாய் இருக்கின்றோம் என்ற உண்மையை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று அது போதிக்கிறதென்றே நான் நம்புகின்றேன். நாம் பாவிகளாய் இருப்பதை தேவனிடத்தில் நாம் ஒப்புக்கொள்ளுகின்றோம் ("அறிக்கையிடுதல்" என்பது homologeo என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பு ஆகும், இது = "அதே விஷயத்தைக் கூறுதல்" அல்லது "ஒப்புக் கொள்ளுதல்" என்று அர்த்தப்படுகின்றது).*

*பாவங்களை அறிக்கையிடுதலில் இம்மனிதருக்குள்ள வெறுப்பானது இவர் homologeo என்ற வார்த்தையைத் தவறாகப் பயன்படுத்துமளவுக்குத் துரத்தியுள்ளது. தரம் வாய்ந்த கிரேக்க இலக்கியமானது இந்த வார்த்தையை, ''ஒப்புக் கொள்ளுதல்'' என்று அர்த்தப்படுத்தப் பயன்படுத்துகின்றது, ஆனால் புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர் எவரும் அந்த வழி முறையில் இதைப் பயன்படுத்தவில்லை. மத். 7:23ல் இவ்வார்த்தைகளை இயேசு உரைத்தபொழுது இதற்கு நேர் எதிரிடையான அர்த்தமே அவருடைய சிந்தையில் இருந்தது: ''நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை.'' யோவான் 12:42ல் அதிகாரிகளில் பலரும் அவர் மேல் விசுவாசம் வைத்திருந்தும் அவரை ஒப்புக் கொள்ளாதிருந்தனர் (homologeo) என்று ஒருவர் கூறினால், பொருளற்ற மதியீனமே விளைகின்றது. ஒருவர் கிறிஸ்துவை அறிக்கையிடுகையிலும் (ரோமர் 10:9; 1 தீமோ. 6:12; 1 யோவா. 2:23; 4:15), மற்றும் ஒருவர் பாவங்களை அறிக்கையிடுகையிலும் (மத். 3:6; யாக். 5:16; 1 யோவா. 1:9), "அறிக்கையிட, ஒப்புக் கொள்ள" என்பதே அடிப்படை அர்த்தமாக உள்ளது.*

*கிறிஸ்தவர் ஒருவர், மனஸ்தாபப்படக்கூடிய மற்றும் நம்பிக்கை நிறைந்த எண்ணப்போக்கை உடையவராய் இருக்குமளவும் பாவமன்னிப்பு தானாகவே உண்டாயிருக்கின்றது என்று உறுதிப்படுத்துவதென்பது தேவனுடைய கிருபையின் இன்னொரு தவறான பயன்பாடாகும். இப்படிப் பட்டதொரு கோட்பாடானது, ''நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால்'' (1 யோவா. 1:9) என்று கூறுவதில் உள்ள யோவானின் தெளிவான அர்த்தத்திற்கு முரண்படுவது மட்டுமின்றி, சாலொமோனின் ஞானத்திற்கும் முரண்பாடானதாக உள்ளது: ''தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்'' (நீதி. 28:13).*

*கிறிஸ்தவ மன்னிப்பை அறிக்கையிடுதல் எதுவுமின்றி தானாகவே ஏற்படுத்த முயற்சி செய்கின்றவர்கள் நீதி. 28:13 மற்றும் 1 யோவா. 1:9 ஆகிய வசனங்களுடன் மட்டுமின்றி லூக். 11:4 வசனத்துடன் வழக்காடுகின்றனர்: ''எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னித்தருளும்.'' ''நம்முடைய (பாவங்கள்) மன்னிக்கப்படுதலானது நாம் மற்றவர்களை எவ்விதம் மன்னிக்கிறோம் என்பதுடன் தொடர்பு படுத்தப்படுகின்றது என்பதே மாதிரி ஜெபத்தில் இயேசுவின் வலியுறுத்தம் ஆகும்" என்று போதிப்பவர் களால் (மேற்சொன்ன) அந்தக்கூற்றானது மழுப்பப்படுகின்றது. அந்த தொடர்பு படுத்தப்படுதல் உள்ளது, ஆனால், மற்றவர்களுக்கு மன்னிப் பளித்தல் என்பது தானாகவே ஏற்படுவதல்ல. மாறாக அது, "அவன் உனக்குச் செவி கொடுத்தால்" (மத். 18:15) மற்றும் "அவன் மனஸ்தாபப்பட்டால்" (லூக். 17:3) என்பதன் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. இந்த நிபந்தனைகள் தவறுகளை அறிக்கையிடுதலைத் தகுதியாக்குகின்றன.*

### *பாவங்கள் எண்ணப்படுவதில்லையா?*

*பாவங்களை அறிக்கையிடுகின்ற ஒரு கிறிஸ்தவர் கிருபையைப் புரிந்து கொள்வதில்லை என்ற சிந்தனையானது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது! முதலாவது, பாவங்கள் அவருக்கெதிராகச் சுமத்தப்படுவதேயில்லை என்ற போதனையானது இன்னும் அதிகம் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. இந்தக் கருத்தானது தானாகவே மன்னிப்பு உண்டாகுதல் பற்றிய முந்திய கலந்துரையாடலைத் தேவையற்றதாக்குகின்றது. தவறாகத் தகவல் அளிக்கப்பட்ட ஒரு சுவிசேஷப் பிரசங்கியார், "ரோமர் 4:8 வசனமானது பாவங்கள் எண்ணப்படாது விடப்படும் ஒரு மனிதரை(தேவனுடைய பிள்ளையை)ப் பற்றிப் பேசுகின்றது. ஆம், இதுவே கிறிஸ்தவர்கள் நிலை நிற்கும் கிருபை என்று நான் நம்புகின்றேன்" என்று எழுதினார்.*

*இந்த சகோதரர் ரோமர் 4:8ஐச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. சங். 32:1, 2அ - வில் இருந்து பவுல் மேற்கோள் காட்டிக் கொண்டிருந்தார்: ''எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான். எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, ... அவன் பாக்கியவான்." இந்த வசனங்கள் தமக்கெதிராகப் பாவம் சுமத்தப்பட்டிருந்த (2 சாமு. 12:13) தாவீது என்ற மனிதரை விவரிக்கின்றன, பிற்பாடு அவைகள் மன்னிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், அவர் தமது பாவத்தை அறிக்கையிடும் வரையிலும் மன்னிக்கப்பட்டிருந்ததில்லை: "நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ் செய்தேன் ..." (2 சாமு. 12:13); "நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன் ..." (சங். 32:5). இவ்விதமாக, ரோமர் 4:8 வசனமானது, ஒரு மனிதர் (1 யோவா. 1:9ல் உள்ளது போல) தமது பாவத்தை அறிக்கையிட்டுள்ளபொழுது மட்டுமே சரியான வகையில் பயன்படுத்தப்படுகின்றது. இவ்விதமாக அறிக்கையிடாத மனிதர் (நீதி. 28:13ல் உள்ளது போல) "தனது மீறுதல்களை மறைக்கிறவராயிருக்கிறார்" மற்றும் அவர் "வாழ்வடைய மாட்டார்" தேவன் பட்சபாதமுடையவரல்ல. பாவம் செய்திருக்கும் எவரொருவரும் அவருடைய பாவம் எண்ணப்*

படுவதிலிருந்து விலக்களிக்கப் படுவதில்லை (தேவனுடைய நியாயப் பிரமாணத்தை மீறுதல்; 1 யோவா. 3:4); மற்றும் தமது பாவத்தை அறிக்கையிட்டுள்ள எந்த கிறிஸ்தவருக்கும் எதிராக அக்குற்றம் சாட்டப் படுவதில்லை.

### வரையறைக்குட்பட்ட மனிதர் கிருபையை எல்லைக்கு உட்படுத்த அகந்தை உள்ளவரா?

தேவனுடைய கிருபையானது எதை மூடுகின்றது அல்லது எதை மூடுவதில்லை என்று கூறுமளவுக்கு எந்த மனிதரும் போதிய அளவு அறிந்திருப்பதில்லை என்று விவாதிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவ ஆராதனையில் இசைக் கருவிகளைப் பயன்படுத்துவதற்குச் சாக்குப் போக்கு கூற அந்த மென்னுணர்வுக் கருத்தானது பயன்படுத்தப்படுகின்றது. இருப்பினும், அதே மென்னுணர்வுக் கருத்தானது, புனித நீர், தூபம் காட்டுதல், ஓரினச் சேர்க்கையை ஏற்றுக் கொள்ளுதல், மற்றும் எந்த ஒரு விஷயத்தையும் கூட நியாயப்படுத்தப் பயன்படுத்தப்படக் கூடுமே! வேதாகமத்தைப் படிப்பதன் மூலம் ஒருவர், கிருபையானது எதை மூடுகின்றது மற்றும் எதை மூடுவதில்லை என்பதை அறிய முடியும்: அறிக்கையிடப்பட்ட எல்லாப் பாவங்களும் மூடப்படுகின்றன, அறிக்கை யிடப் படாதவைகள் மூடப்படுவதில்லை (1 யோவா. 1:9).

ஒருவர் அறியாமல் பாவம் செய்தால் அதைப் பற்றிய விஷயம் என்ன? அறியாமை என்பது ஒரு சாக்குப்போக்கல்ல (லேவி. 5:17), ஆனால் அன்பின் தேவன், அறியாமையில் பாவம் செய்தவரை மிக இணக்கத்துடனும், அதிகம் கனிவுடனும் நியாயந்தீர்க்கின்றார் (லூக். 12:47, 48; 1 தீமோ. 1:13). ஞானமுள்ள நபர், "சத்தியத்தை அறிவதற்காக" (யோவா. 8:32) வேத வசனங்களைத் தினந்தோறும் ஆராய்கின்றார் (அப். 17:11), மற்றும் அவர் உள்நோக்கமின்றிச் செய்த பாவங்களுக்காக மன்னிப்பு வேண்டி ஜெபித்தார்: "... மறைவான குற்றங்களுக்கு என்ன நீங்கலாக்கும்" (சங். 19:12). அவர் தன்னால் முடிந்த அளவு பாவமற்று இருக்க அதிக முயற்சி செய்வார் (1 யோவா. 3:9).

## முடிவுரை

சபைக்குள்ளோ அல்லது புறம்பேயோ தேவனுடைய கிருபையானது கீழ்ப்படியாமைக்கு ஒரு மூடுதலாக உள்ளது என்று போதிப்பது வேத வசனத்தைப் பற்றியிழுப்பதாயிருக்கிறது. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, தொடர்ந்து தனது பாவங்களை அறிக்கையிட்டு, மீட்பருடைய கிருபையை தமது ஆசீர்வாதமாகவும் ஒரு தவறாத பலமாகவும் பெற்றுள்ள கிறிஸ்தவர் எவ்வளவு நன்றி நிறைந்தவராயிருக்க வேண்டும்.

பேட் ஃபிளானிகன் அவர்கள் கூறியபடி, "கிருபை என்பது நாம் பெறத் தகுதியற்றவைகளைப் பெறுவதாகும், இரக்கம் என்பது நாம் பெறத் தகுதியானவைகளைப் பெறாதிருத்தலாகும்."

குறிப்புகள்

[1]John Newton, “Amazing Grace,” *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [2]“Anarthrous” என்ற வார்த்தையானது சுட்டுச் சொல்லற்ற வார்த்தையை மட்டும் குறிப்பிடுகின்றது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், “anarthrous law” என்பது பொதுவாக “சட்டம்-law” என்பதைக் குறிப்பதாகவும்,“*the* law” என்பதற்கு எதிர்ப்பாயிருப்பதாகவும் உள்ளது.